INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM
ANNUAL EXAMINATION - FEBRUARY - 2009

CLASS :VIII　　　　　தமிழ்　　　　　Maximum marks : 100
Duration : 3 hours

---

## செய்யுள் பகுதி

I　கீழ் கண்ட செய்யுளைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:-

(அ)
அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

வினாக்கள் :-　　　　　1 × 4 = 4

1. அற்ற - என்பதன் பொருள் என்ன ?
2. சிறந்த உறவினர்க்கு உவமையாகக் கூறப்பட்டவை எவை ?
3. எவர் உறவல்லர் ?
4. இப்பாடலை இயற்றியவர் யார் ?

(ஆ)
தமிழ் மொழிபோல் தழைத்தோங்கும் இமயம் வெள்ளித்
　　தகடுகளைப் பதித்தாற்போல் பனியின் மூட்டம்
அமிழ்ததனைக் குளிர்வித்தே உலகுக் கெல்லாம்
　　அளிக்கின்ற உயிர்ஓட்ட அருவிக் கூட்டம்
சுமைசுமையாய் வளங்களினைச் சுமந்து செல்லும்
　　சொல்லுக்குள் அடங்கிவராக் கங்கைத் தோற்றம்
கமழ்கின்ற மலர்சுமந்த மரங்கள் ஈட்டம்
　　கவின்இயற்கைப் பேரரசி செங்கோல் ஓச்சும்.

வினாக்கள் :-　　　　　1 × 5 = 5

1. மலர் மணம் தருகிறது என்பதை எச்சொல் குறிக்கிறது ?
2. பதிக்கப்பட்ட வெள்ளித்தகடுகள் போல எது காட்சியளிக்கிறது ?
3. அருவிக்கூட்டம் எதனை அளிப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
4. வளங்களைச் சுமந்து வருவது எது ?
5. ஈட்டம் - பொருள் எழுதுக.

II　விடையளி :- ஏதேனும் 5　　　　　3 × 5 = 15

1. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் - இப் பழமொழியின் கருத்தைக் கொண்ட குறளை விளக்கி எழுதுக.
2. மறத்தல் எனும் செயல் எப்போது நற்பண்பாகிறது ? எப்போது தீய பண்பாகிறது ?
3. கல்லாதார் இழிவை மூதுரை எங்ஙனம் கூறுகிறது ?
4. எவை நல்ல மரங்கள் அல்ல ? எவை நல்ல மரங்கள் ?
5. அடக்கமுடையார் எதைப்போன்றவர் ?
6. இயற்கையின் அழகைக் "காளிதாசர் சாகுந்தலத்தில்" கவிஞர் எவ்வாறு உரைக்கிறார் ?

7.அடக்கம் உடையார் - எனத் துவங்கும் மூதுரை செய்யுளை எழுதுக.

## உரைநடைப் பகுதி

I **பொருள் கூறுக :-** 2 ½ மதிப்பெண்கள்

1.கேளிர் 2.கவி 3.அறம் 4.வான் 5.எழில்

II **பிரித்து எழுதுக :-** 2 ½ மதிப்பெண்கள்

1.கொம்பின்றி 2.மூவேந்தர் 3.தமிழமுது 4.வடக்கமர்ந்து
5.சினந்தெழுந்தார்

III **வாக்கியத்தில் அமைத்து எழுதுக :-** 8 மதிப்பெண்கள்

1.செழிப்பாக 2.களித்தார் 3.ஒவ்வொரு 4.நிகரற்றது

IV **கோடிட்ட இடம் நிரப்புக :-** 4 மதிப்பெண்கள்

1.பொய்யா நாவினர் - எனப் போற்றப்படும் சங்க காலப் புலவரின் பெயர் ____________________.
2.நாட்டுப்புறக் கலைகள் தோன்றியதற்கு அடிப்படையாய் இருந்தது ____________.
3.வெற்றி வேற்கையின் இன்னொரு பெயர் _______________.
4.சிவப்பிரகாசர் எழுதிய நீதி நூலின் பெயர் _____________.

V **குறுகிய விடையளி :-** 2 X 5 = 10

1.மூவேந்தர்களின் கொடியிலிருந்த சின்னங்களும் அவர்களின் அடையாள மாலைகளையும் எழுதுக.
2.பறம்பு மலையில் என்னென்ன பொருட்கள் கிடைத்தன ?
3.நிகழ்த்தாக் கலைகள் , நிகழ்த்து கலைகள் யாவை ?
4.நீதி இலக்கியங்கள் எவற்றை எடுத்துரைக்கின்றன ?
5.கடையெழு வள்ளல்கள் எனப் போற்றப் படுபவர் யாவர் ?

VI **விரிவான விடையளி :-** ஏதேனும் 4 4 X 4 = 16

1.பாரி ஓரறிவு உயிர்களிடத்தும் கருணை கொண்டவர் என்பது எவ்வாறு அறியப்படுகிறது ?
2.கரகாட்டம் பற்றிக் குறிப்பு வரைக .
3.நீதி நூல்களால் ஏற்படும் பயன்கள் யாவை ?
4.உவமையைக் கொண்டு நல்வழி விளக்கும் நீதி யாது ?
5.வள்ளல் பாரியின் கொடைத் தன்மையை விவரித்து எழுதுக.
6.மூவேந்தர்களும் நாட்டை எவ்வாறு ஆண்டனர் ?

## இலக்கணப் பகுதி

விடையளி :- ஏதேனும் 6 2 × 6 = 12

1. வினா எழுத்து என்றால் என்ன ? அவை யாவை ?
2. உயிரெழுத்துகளுள் எவை எவற்றுக்கு இன எழுத்துகளாகும் ?
3. இடைச் சொல் என்பது யாது ? உதாரணத்துடன் விளக்குக .
4. எந்தெந்த எழுத்துகள் சொல்லில் எங்கு நின்று வினாப் பொருள் தரும் ?
5. குறில் , நெடில் எழுத்துக்குரிய மாத்திரை அளவு யாது ?
6. பெயர்ச் சொல் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
7. பால் என்றால் என்ன ? பால் எத்தனை வகைப்படும் ? எடுத்துக்காட்டுகள் தருக.

## கட்டுரைப் பகுதி

1. உங்கள் மாவட்ட ஆட்சியரை உங்கள் பள்ளியில் நடக்கவிருக்கும் குழந்தைகள் நாள் விழாவிற்கு தலைமை தாங்க அழைப்பு விடுத்து ஒரு கடிதம் வரைக.

8 மதிப்பெண்கள்

2. நூலகம் அல்லது மாமரம் குறித்து கட்டுரை ஒன்று வரைக.

8 மதிப்பெண்கள்

3. கொடுக்கப்பட்டுள்ள பத்தியினைப் படித்து கீழ் கண்ட வினாக்களுக்கு விடையளி :- 5 மதிப்பெண்கள்

### தஞ்சைப் பெரிய கோயில்

பெருவுடையார் கோயில் தஞ்சாவூரில் அமைந்துள்ளது. இதனைப் பெரிய கோயில் எனவும் வழங்குவர். இதனை முதலாம் இராசஇராசன் கட்டினான். இக்கோயிலின் கோபுரம் மிகவும் உயரமானது. இந்தக் கோபுரத்தின் நிழல் கீழே தரையில் விழாமல் அதன் மீதே விழுமாறு கோபுரத்தைக் கட்டியுள்ளனர். இதன் மூலம் தமிழர்களின் கட்டிடக்கலைச் சிறப்பினை அறியலாம். இங்கே கலை நுட்பத்துடன் கூடிய பெரிய நந்தியும் உள்ளது. கருவறையின் மேலே உள்ள விமானத்தின் உள்பக்கத்தில் வண்ணச்சுவர் ஓவியங்கள் உள்ளன. இவை வரைந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் அவை வண்ணம் மாறாமல் விளங்குகின்றன. தஞ்சைப் பெரிய கோயில் தமிழரின் சிற்பக்கலை , ஓவியக்கலை சிறப்பினுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

வினாக்கள் :-

1. பெருவுடையார் கோயில் எங்கு உள்ளது ? கட்டியவர் யார் ? அதன் வேறு பெயர் என்ன ?
2. கருவறையின் மேல் உட்புறச் சுவரின் சிறப்பு யாது ?
3. கோயில் கோபுரத்தின் சிறப்பு யாது ?

4. தஞ்சைப் பெரிய கோயில் எவற்றை எடுத்துரைக்கின்றன ?

5. தஞ்சைப் பெரிய கோயிலில் ____________________ கூடிய பெரிய நந்தியும் உள்ளது.

*****************************